ரூ. 100

ISSN 2394 - 0948

# பெயல்

அரையாண்டு ஆய்விதழ் அக்டோபர் 2015 - மார்ச் 2016

பெயல் : 02 துளி : 01

PEYAL - An Internationally Refereed Journal of Tamil Studies Volume II Issue 1




க. ஜவஹர் • இரா. அறவேந்தன் • துரை. சீனிச்சாமி • செ. மு. நஸீமா பர்வீன்

க. பஞ்சாங்கம் • அரங்க. நலங்கிள்ளி • மெய். இரெ. எழிலி • சி. சிவராஜ் • ப. சின்னச்சாமி

PEYAL
Volume II Issue 1
October 2015 - March 2016
An Internationally Refereed Journal of Tamil Studies

*Editor in Chief*
**Dr. M. Senthilkumar**
senthiephoto@gmail.com

*Associate Editors*
**Dr. P. Ramesh**, *Coimbatore*
**Dr. R. Chandrasekaran**, *Namakkal*
**Dr. T. Umadevi**, *New Delhi*
**Dr. S. Kumaran**, *Malaysia*
**Dr. Ammankili Murugadass**
*Sri Lanka*

*Expert Committee*
**Dr. Sirpi Balasubramaniam**
**Kovai Gnani**
**Dr. K. Nachimuthu**
**Dr. K. Panjangam**

*Managing Editor*
**S. M. Naseema Parveen**

*Sales and Advertisement*
**A. L. Elanchezhiyan, S. Akila**
+919843147711, +919943887717

*Publisher*
**S. Manickaraj**
**Peyal Publications**
12, Sri Ragavendra Gardens
Subramaniampalayam
G.N. Mills Post, Coimbatore 641 029
Tamilnadu, India
+919942049400
peyalpublications@gmail.com

*Printed at*
**P. V. Graphics**
29A, A.K.S. Nagar, Thadagam Road
Coimbatore 641 001, TN, India
+919842232544



## தலையங்கம்

# பன்னாட்டுக் கருத்தரங்கம்

சமீபகாலமாகப் பன்னாட்டுக் கருத்தரங்குகளின் எண்ணிக்கை பெருகி வருகின்றது. தேசியக் கருத்தரங்கங்களின் காலம் முடிந்துவிட்டதை இது உறுதி செய்கின்றது. தனியார் கல்லூரிகள் குறிப்பாக சுயநிதிக் கல்லூரித் தமிழ்த்துறைகள் இந்தப் புதிய பன்னாட்டுக் கருத்தரங்க அலையைத் தோற்றுவித்துள்ளன.

தேசியக் கருத்தரங்கத்தின் பெயரால் பல்கலைக்கழக நிதிநல்கைக் குழுவின் நிதியுதவியுடன், கட்டுரையாளர்களின் கட்டாய நிதியுதவியையும் சேர்த்து வாரிச் சுருட்டிவந்த நிலை மாறிவிட்டது. ஏனென்றால், நிதி வேண்டி விண்ணப்பித்துக் காத்திருந்து, கருத்தரங்கம் நடத்துவதற்குக் காலதாமதம் ஆகிறது. இக்காலதாமதத்தால், ஆய்வு வெறியோடு கட்டுரை மூட்டைகளைச் சுமந்தலையும் ஆராய்ச்சி வல்லுநர்களின் கட்டுரைகளைக் கறையான் அரித்துவிட்டால் என்னவாவது என்ற உயரிய நோக்கத்துடன் தனியார் கல்வி நிறுவனங்கள் களமிறங்கிவிட்டன. தமிழாய்வைத் தூக்கி நிறுத்தவென்றே தனிநபர்களால் உருவாக்கப்பட்ட சில அமைப்புகளும், பதிப்பகங்களும் இந்தப் பன்னாட்டுக் களத்தில் வழிகாட்டும் முன்னோடிகள்!

கருத்தரங்கப் பொதுப் பொருண்மையைத் தலைப்பாகத் தாங்கிவரும் பணம் பெருக்கும் அழைப்பிதழ்கள் கட்டுரையாளருக்குத் தலைப்பையும் பட்டியலிட்டுத் தருகின்றன. இதுவரை அப்படியான ஆய்வுகள் நடத்தப்படாதது போலவும் இந்தப் பன்னாட்டுக் கருத்தரங்கம் தான் அந்த ஆய்வுப் பொருண்மையை நூற்றுக்கணக்கான கட்டுரைகளின் வழியாக அலசி ஆராய்ந்து காயவைத்துத் தமிழ்

ஆய்வை அடுத்த கட்டத்திற்கு
செல்வதுபோலவும் பாவனை செய்

பல்கலைக்கழக நிதி
ISBN எண் இடப்பட்ட
வெளியிடப்படும் கட்டுரை
ஆய்வைச் சமர்ப்பிப்பதற்கான
தகுதியாக்கியதும் கருத்தரங்கம்
எண்ணிக்கையும் கட்டுரை
எண்ணிக்கையும் திடீரென
உயர்ந்துவிட்டது. 500 ரூபாய்
ரூபாய்வரை கட்டணம் கட்டுவதுதா
கட்டுரைக்கான அடிப்படைத் தகுதி
கட்டிவிட்டால் கட்டுரை தேர்வாகி

செருப்புக்கு ஏற்ற கால
அமையவேண்டும் என்பது
அதாவது, A4 தாளில் யுனிகோட்
நான்கு பக்கங்களுக்கு மிகாமல்
ஒரு கட்டுரை, முன்னெடுக்கும்
அதன்மீதான கருதுகோள்
முடிவுகள் எய்தும் இடத்தில்
பக்கங்களின் அதிகார
கட்டுரையைப் பூட்டி வைக்
ஆய்வுக் கட்டுரை எழுதுபவருக்
கட்டுரை நான்காவது பக்க
படுத்துக்கொண்டால்? ஆக
கருத்தரங்குகள் கட்டுரை தயாரி
நடத்தப்படுகின்றன. நான்கு
உரிய தொகையைச் செலுத்
பக்கங்களில் நீட்டிப் ப
சலுகையைத் தந்தால்,
நடத்துபவரின் கல்லா காலியா
நிறைவதை நோக்கமாகக் கொ
கருத்தரங்கங்கள் நலி
பிறகு தமிழ் ஆய்வுலகம்
தமிழாய்வைத் தூக்கி நிறுத்
விளங்கும் இவர்களின் கை
அவசியமல்லவா.

மூன்றாவதாக ஒரு சலு
கருத்தரங்கிற்கு வரவேண்
இல்லை. கட்டுரையே தன்